# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2065 - 2018 මාර්තු මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.03.29

*2065 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | – |
| முன்னறிவித்தல்கள் | – |
| இறுதிக் கட்டளைகள் | – |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | – |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | – |
| மேல் மாகாணம் | – |
| மத்திய மாகாணம் | – |
| தென் மாகாணம் | – |
| வட மாகாணம் | – |
| கிழக்கு மாகாணம் | – |
| வடமேல் மாகாணம் | – |
| வடமத்திய மாகாணம் | – |
| ஊவா மாகாணம் | – |
| சப்பிரகமுவ மாகாணம் | – |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | – |
| மேல் மாகாணம் | – |
| மத்திய மாகாணம் | – |
| தென் மாகாணம் | – |
| வட மாகாணம் | – |
| கிழக்கு மாகாணம் | – |
| வடமேல் மாகாணம் | – |
| வடமத்திய மாகாணம் | – |
| ஊவா மாகாணம் | – |
| சப்பிரகமுவ மாகாணம் | – |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | – |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | – |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | – |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 68 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | – |


***கவனிக்க.***– தேசிய கணக்காய்வு சட்டமூலம் 2018, மாச்சு மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

67- B81267-353(2018/03)

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/40962.
மாகாணக் காணி ஆணையாளரின் இல.
NP/28/04/2/SLO/41 - இரட்சண்யசேனை

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

**யாழ்ப்பாண** மாவட்டம் **தென்மராட்சி** பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட **கைதடி** கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த **கைதடி** எனும் கிராமத்தில் அமைந்துள்ள **பி.பி.யா (L.2789)** ஆம் 264 இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் **02 ஏக்கர் 06 பேர்ச்** (ஏ02 றூட்00 பே06) விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை **பெண் பிள்ளைகளுக்கான விளக்கமறியல் இல்லம், ஏழைச் சிறுவர்களுக்கான கைத்தொழில் பயிற்சி நிலையம் மற்றும் அலுவலர்களுக்கான விடுதி ஆகியவற்றிற்கான கட்டடங்களை நிர்மாணிக்க** இரண்டாவது நீண்டகால குத்தகைக்குத் தருமாறு கேட்டு **இரட்சண்ய சேனை** விண்ணப்பித்துள்ளது என இத்தாளில் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு :- காணித்துண்டு இலக்கம் 465 - பிபி 39;
கிழக்கு :- காணித்துண்டு இலக்கம் 25 - பிபிஎஸ் 2008;
தெற்கு :- கண்டி வீதி;
மேற்கு:- காணித்துண்டு இலக்கம் 465 - பிபி 39.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** :- முப்பது (30) வருடங்கள் (2002.06.01 தொடக்கம் முன்னோக்கி;

**வருடாந்தக் குத்தகை** :- பிராதன மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2002 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 0.5 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தவணைப்பணம் :- இல்லை;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப் தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி பெண் பிள்ளைகளுக்கான விளக்கமறியல் இல்லம், ஏழைச் சிறுவர்களுக்கான கைத்தொழில் பயிற்சி நிலையம் மற்றும் அலுவலர்களுக்கான விடுதி தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள மற்றும் கட்டப்படுகின்ற கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட் சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத் தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ்.ஏ.எரந்திகா டபிள்யு. குலரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 29.

3-1321